Date. 05.06.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS.27/2018**

**பி. வா.சா. 1**

**பெயர். திரு. பாலமுருகன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

என்னிடம் நான்கு சக்கர வாகனம் உள்ளதா என்றால் எதுவும் இல்லை. 2 ம் பிரதிவாதி ஐய்யப்பன் ஒரு டிராக்டர் மட்டுமே உள்ளது. அதன் பதிவு எண். எனக்கு ஞாபகம் இல்லை. இந்த டிராக்டர் வாங்கி 90 நாட்கள் ஆகிறது. 80 ல் ஒரு டிராக்டர் வாங்கப்பட்டது. அதை விற்றுவிட்டு 90 ல் ஒரு டிராக்டர் வாங்கப்பட்டது. அது தான் தற்போது உள்ளது. டிராக்டரின் பதிவு புத்தகம் எனது தகப்பனாரின் பெயரில் உள்ளது. அதை எனது சொந்த நிலத்திற்கு தான் உபயோகப்படுத்துகிறோம். நாங்கள் 4 பேரும் சேர்ந்து உபயோகப்படுத்துகிறோம். மற்ற வண்டிகளை விற்பனை செய்து ஆகிவிட்டதா என்றால் வழக்கில் சம்மந்தப்பட்ட எந்த வண்டிகளும் இல்லை. என் அண்ணன் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க போகிறாரா என்றால் எனக்கு தெரியவில்லை. அவரை தான் கேட்க வேண்டும். என் தகப்பனார் 18/07/2006 அன்று பாரத ஸ்டேட் வங்கியில் சொத்துக்களை அடமானம் வைத்து கடன் வாங்கினாரா என்றால் கோபிக்காக வாங்கினார். கோபிக்காக வாங்கியதாக என் அப்பா சொன்னார். 1, 2 பிரதிவாதிகளுக்கு இந்த கடன் பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதற்காக கடன் வாங்கி கொடுத்தார் என்றால் பில்டிங் வேலை செய்வதற்காக வாங்கி கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அடமான கடன் பத்திரத்தில் என் அப்பா கையெழுத்து போட்டுள்ளார். அதில் ஐயப்பன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளாரா? என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த அடமானம் ஐயப்பனுக்காக வாங்கி கொடுக்கப்பட்டது என்றும் அதனால் அவர் அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றும், சொன்னால் சரியல்ல. அடமானம் போட்டு நான்கு சக்கர

வாகனங்கள் வாங்கப்பட்டன என்றும், அவற்றை வாடகைக்கு விட்டு நானும் இரண்டாம் பிரதிவாதி ஐயப்பனும் சம்பாதித்து வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லப்பட்டுள்ள வண்டிகள் அனைத்தும் எங்கள் வசம் தான் உள்ளது என்றும் நாங்கள் இல்லை என்று பொய் கூறுகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் மூவரும் ஆரம்பித்ததாக கூறும் வாட்டர் பிளாண்ட் பெயர் என்ன என்றால் ஸ்ரீவாரி வாட்டர் பிளாண்ட் ஆகும். அது தமிழ்நாடு தொழில் வணிகத்துறையின் உதவியுடன் நிறுவப்பட்டது என்றால் சரிதான். இது தொடர்பாக பல துறைகளுக்கு லைசன்ஸ் வேண்டி விண்ணப்பம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த அனைத்து மனுக்களும் கோபி பெயரில் தான் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வியாபாரத்துக்கு TIN No எண் வாங்கப்பட்டதா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த விண்ணப்பம் கொடுக்க கோபி மட்டும்தான் சென்றார். என்னிடம் காண்பிக்கப்படுவது அந்த விண்ணப்பத்தின் நகல்கள் என்றால், இதில் தமிழில் இருப்பது தெரிகிறது ஆங்கிலத்தில் இருக்கும் விண்ணப்பங்கள் தெரியவில்லை. நாங்கள் இரண்டு மொழிகளிலும் விண்ணப்பம் கொடுத்தோம். தொழில் நடத்துவதற்கு வங்கியில் விண்ணப்பம் கொடுத்தோம் என்றால், விண்ணப்பம் எதுவும் கொடுக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்களில் உள்ள அனைத்தும் அந்த வாட்டர் பிளாண்ட் தொழில் சம்பந்தமான விண்ணப்பங்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா. சா.ஆ. 16 ஆகும். அந்த வாட்டர் பிளாண்ட் அமைப்பதற்கு அனுமதி கிடைத்தது. ஆனால் இன்னும் தொழில் தொடங்கப்படவில்லை. என்ன காரணத்தால் தொழில் தொடங்கப்படவில்லை என்றால் பாகப்பிரிவினையால்தான் தொடங்கப்படவில்லை. நாங்கள் சொத்தை பிரிக்காமல் அந்த தொழிலை தொடங்கக்கூடாது என்று தடுத்து விட்டோம். நாங்கள் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் சேர்ந்து தடுத்தோம். வாட்டர் பிளாண்ட்டில் இயந்திரங்கள் உள்ளது. அந்த இயந்திரங்களின் மதிப்பு சுமார் 10 லட்சம் இருக்கும். அந்த இயந்திரங்களை நிறுவனத்தில் நாங்கள் மூன்று பேரும் சேர்த்து வாங்கினோம். வாட்டர் பிளாண்ட் தொழிலை நானும் மற்ற பிரதிவாதிகளும் செய்தோம் என்பதை காண்பிக்க எந்த ஆவணமாவது எங்கள் வசம் உள்ளதா என்றால் உள்ளது. வாட்டர் பிளாண்ட் அமைப்பதற்கு எவ்வளவு செலவு செய்தோம் என்பதை நோட்டில் எழுதி வைத்துள்ளோம். என்னால் அப்படியே கூற முடியாது. அந்த இடத்திற்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த மின் இணைப்பை துண்டித்து விட்டார்கள். அந்த இடத்தில் கட்டிடத்தின் சாவி யாரிடம் உள்ளது என்றால் கோபியிடம்தான்

உள்ளது. அந்தக் கட்டிடத்தில் கோபி சுமார் ஒரு கோடி மதிப்பிற்கும் மேலான இயந்திரங்களை வைத்திருந்தார் என்றும், நாங்கள் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் ஒன்றாக சேர்ந்து அந்த கதவை உடைத்து இயந்திரங்களை கொண்டு சென்று விற்பனை செய்து விட்டோம் என்றும், சொன்னால் சரியல்ல. அந்த தொழில் முழுக்க முழுக்க கோபியின் தனிப்பட்ட தொழில் என்றும் அதற்கான செலவுகள் அனைத்தையும் அவர்தான் செய்துள்ளார் என்றும் அந்த தொழிலுக்கும் எங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கோபி மீது பொறாமை கொண்டு அவரது தொழிலை அவரை பார்க்க விடாமல் தடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. என் தகப்பனார், தாயார், மற்றும் கோபி, ஆகியோரை நாங்கள் அந்த ஊரிலேயே குடியிருக்க விடாமல் விரட்டியடித்து விட்டோம் என்றும், அதேபோல் அவர்களை எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி, சொத்துக்களை அனுபவிக்க விடாமல் தடுத்து விட்டோம் என்றால் சரியல்ல. அதேபோல் அந்த கட்டிடத்தை எடுத்து அத்தனை பொருட்களையும் நாங்கள் எடுத்துச் சென்று விட்டோம் என்றால் சரியல்ல. என் பெயரிலும், ஐயப்பன் பெயரிலும், வாங்கப்பட்ட சொத்துக்களும்,அதேபோல் கோபி பெயரில் சேர்ந்து வாங்கப்பட்ட சொத்துக்களும் பொது குடும்ப சொத்துக்கள் என்றால், சரியல்ல. என் பெயரிலும் ஐயப்பன் பெயரிலும் வாங்கப்பட்ட சொத்துக்கள் எங்களது தனிப்பட்ட சொத்துக்களாகும். தனிப்பட்ட முறையில் எனக்கோ, ஸ்ரீதருக்கோ, ஐயப்பனுக்கோ சொத்தை வாங்கும் அளவிற்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்துக்கள் அனைத்தும் தாவா சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டுதான் வாங்கப்பட்டன என்றால் சரியல்ல. கோபி மட்டும்தான் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தி சம்பாதித்து வந்தார் என்றும் எங்களுக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

**இல்லை**